# புத்தரகித்த திடீர் மரணம்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் ரெஜிஸ்டர் எண் : 49

மலர் 9 போன் 689

இதழ் 102

National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 10 ஸபர் 13 புதன்கிழமை [24-5-67]

கொழும்பு, செவ். பண்டாரநாயகா கொலை வழக்கில் ஆயுட்கால சிறைத் தண்டனைபெற்ற புத்தரகித்ததேரோ நேற்றிரவு 10 மணிக்கு பெரியாஸ்பத்திரியில் மரணமானார்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவை 1959-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 26-ந் திகதி கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனைபெற்று பின்னர் ஆயுட்காலத் தண்டனையாக மாற்றப்பட்ட புத்தரகித்த தேரோ வெலிக்கடைச் சிறையில் சிறைவாசம் அனுபவித்துவந்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]



# "அரசியல் வேறுபாடு உண்டு தனிப்பட்ட பகைமை இல்லை"

## எம். ஜி. ஆர். - ராதா வழக்கில் எம். ஜி. ஆர். சாட்சியம்

(நமது விசேஷ நிருபர்)

சென்னை, மே 23

**"அரசியலில் ராதா அண்ணனுக்கும் எனக்கும் வேறுபாடு இருந்தாலும் தனிப்பட்ட முறையில் எங்களுக்குள் பகைமை இல்லை. ராதா அண்ணன் மீது எனக்குப் பெருமதிப்பு உண்டு" என்று திரைப்பட நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

திரைப்பட நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை 1967-ம் ஆண்டு ஜனவரி 12-ந் திகதி கொலைசெய்ய முயன்றதாகவும் தம்மைத்தாமே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள எத்தனித்ததாகவும் திரைப்பட நடிகர் எம். ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நேற்று முதல்தடவையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் பிராசிக்கூஷன் தரப்பில் முதலாவது சாட்சியாக நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் விசாரிக்கப் பட்டார்.

### பொன்னிற டெரிலின் சேட்

நடிகர் ராமச்சந்திரன் பொன்னிற டெரிலின் ஷேர்ட்டும் வேட்டியும் அணிந்திருந்தார். தோளில் தி. மு. க. நிறமான கறுப்பும்சிவப்பும்கலந்த சால்வை அணிந்திருந்தார். எம். ஜி. ஆர். பேசும்போது அவரது வாயிலிருந்து மிக மென்மையாகவே சத்தம் வெளிவந்தது. பலஹீனமாகக் காணப்பட்ட எம். ஜி. ஆரின் தொண்டை கட்டிப்போயிருந்ததுதான் அவரது குரல் மிக ஹீனமாக இருந்ததற்குக்காரணம்.

### சத்தம் வெளியே கேட்கவில்லை

எம். ஜி. ஆர். பேசியது வெளியே தெளிவாகக் கேட்காததால் அவரதுசாட்சியம் தெளிவாகக் கேட்கவில்லை என்று எதிரி தரப்பில் ஆஜரான சென்னை பிரபல வழக்கறிஞர் என். எம். நடராஜன் நீதிபதியிடம் முறையிட்டார். இதைஏற்றுக்கொண்ட நீதிபதி சாட்சிக்கூண்டிலிருந்து எம். ஜி. ஆரை வெளியே இறங்கிவழக்கறிஞர்மேசைக்குச் சமீபமாக நின்று சாட்சியமளிக்குமாறு உத்தரவிட்டார். எம். ஜி. ஆர். நீதிமன்றத்தில் மூன்றுமணி நேரம் சாட்சியமளித்தார்.

### ராதாஅண்ணன்

''ராதா அண்ணன் மீது எனக்குப் பெருமதிப்பு இருக்கிறது'' என்று எம். ஜி. ஆர். தனது சாட்சியத்தில் கூறினார். அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியது:—

### அவர்மீது கோபமில்லை

என்னைப் பொறுத்தவரையில் அவர்மீது (எம். ஆர். ராதா) எனக்கு எவ்வித கோபதாபமுமில்லை. அரசியலில் எனக்கும் ராதா அண்ணனுக்கும் அரசியல் வேற்றுமைகள்இருந்தபோதிலும் தனிப்பட்டமுறையில் எங்களுக்குள் பகைமை இல்லை. பலதடவைகளில் ராதா அண்ணனுக்குப் படங்களில் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கும்படி திரைப்படத் தயாரிப்பாளர்களை நான் கேட்டிருக்கிறேன். நான் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்மீது எனக்குப் பெருமதிப்பிருக்கிறது.

### ராதா கையில் ரிவால்வர்

பிராசிக்கியூஷன் தரப்பு வழக்கறிஞரின் கேள்வியொன்றுக்கு நடிகர் எம். ஜி. ஆர். பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினார்.

நான் வாசுவின் பக்கம் திரும்பியபொழுது திடீரென்று எனது இடதுபக்கக் காதின்கீழ் ஏதோ ஒரு தாக்கம் ஏற்பட்டதையும் அது வலியையும் கொடுத்ததையும் உணர்ந்தேன் நான் திரும்பிப்பார்த்ததும் ராதா அண்ணன் தனது வலதுகையில் கைத்துப்பாக்கியை

8-ம் பக்கம் பார்க்க



## உணவுக்கு பருத்தி எண்ணை

சென்னை, மே 23

உணவுக்குச் சேர்க்கக் கூடிய எண்ணை பருத்திக் கொட்டையிலிருந்து பெறலாமென சென்னையில் நடத்தப்பட்ட பரிசோதனையிலிருந்து தெரியவந்துள்ளது. இப்பரிசோதனைக்கு அமெரிக்காவும் உதவுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டாய நாடுகடத்தல் கட்டாயம் நடக்கும்

### செனட்டர் மாணிக்கம சொன்னார்

யாழ்ப்பாணம், புதன்

கட்டாய நாடுகடத்தல் கட்டாயம் நடக்குமென நேற்றிரவு வாலிபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தின் பிரமுகரான செனட்டர் எம். மாணிக்கம் நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஐம்பது பேருக்கு அதிகமான வாலிபர்கள் செனட்டர் மாணிக்கத்தைச்சுற்றிநின்று பல கேள்விகளைத் தொடுத்தனர். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் மாணிக்கம் பதிலளித்தார்.

கட்டாய நாடுகடத்தல் இல்லையெனப் பிரதமர் கூறியிருக்கிறாரே எனக் கேட்டபோது, 'பிரதமர் அப்படிக் கூறியிருக்கலாம். ஆனால் அவர் சம்பிரதாயத்துக்காக அப்படி கூறியிருக்கிறார். நாம் அதை நம்பமாட்டோம்' என்றார் மாணிக்கம்.

(8-ம் பக்கம் பார்க்க)

# 'மொழிச்சட்டத்தால் வேலை இழந்தோர் பிரச்னைதீரும்"

## முற்றவெளிக் கூட்டத்தில் ஜி. ஜி. தெரிவித்த நம்பிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''56-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப் பட்டபொழுது காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பழைய அரசாங்க ஊழியருக்கு சிங்கள தேர்ச்சி அவசியமில்லை என எனக்கு கொடுத்த வாக்குறுதியை இப்போது தேசிய அரசாங்கம் நிறைவேற்றிவிட்டது. ஆனால் 56 வயதிற்குப்பின் சிங்களத் தேர்ச்சி அவசியமென்று கூறுவது முட்டாள் தனமானது. சிங்களம் தெரியாத சிங்களவர் 56 வயதிற்கு பின் சிங்களம் படிக்க சம்மதிப்பார்களா?''

முற்றவெளி மைதானத்தில் நேற்றிரவு நடந்த சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர் சங்க கூட்டத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:—

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்தவர்கள் பிரச்னை பற்றி நான்பலமுறை பிரதமருடன் தொடர்பு கொண்டுள்ளேன். இவர்களுக்கு தன்னாலானமட்டும் உதவி செய்யவிருப்பம் என பிரதமர் கூறியுள்ளார். கூடிய விரைவில் மீண்டும் பேச்சு

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சேவல்கள்:
ஒரு நாள் 20 சதம், ஒரு மாசம் 90 சதம், இரண்டு மாசம் 2/50 சதம், மூன்று மாசம் 4 ரூபா, நாலுமாசம் 6 ரூபா, ஐந்துமாசம் 8 ரூபா. அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1820

பேடுகள்:
ஒருநாள் 2 ரூபா, ஒரு மாசம் 4 ரூபா, இரண்டு மாசம் 6 ரூபா, மூன்று மாசம் 8 ரூபா, நாலு மாசம் 10 ரூபா, ஐந்து மாசம் 15 ரூபா. அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1821

கார்
E. L. சீரீசில் நல்ல தரமுள்ள சோமசற் கார் ஒன்று விற்பனைக்குள்ளது. தேவைக்கு கீழ்க்காணும் விலசத்திற்கு தொடர்பு கொள்ளவும். G. B. விமலசேனு, 153, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2402

ராக்ரர்
ராக்ரர் கட்டுப்பணத்திற்குக் கொடுக்கப்படும். [Armature] ஆமேச்சரும், ரையர், றிம், உவீல், ராக்ரர் பாட்சும் மலிவாகக் கொடுக்கப்படும். அசோக்கா இன்சினியறிங் கோர்ப்பறேசன், உயிலன்குளம், மன்ஞர். 1832

காணி
வேலணை கிழக்கு அரசினர் பிரசவ விடுதிக்கு அருகாமையில் இருக்கும் 23 பரப்பு காணி விற்பனைக்குண்டு. ஒரு மாத காலத்துக்குள் பரப்பு 500 ரூபா விகிதம் விற்பனை செய்துதரும் தரகர்களுக்கு ரூபா 1000த்திற்கு 20 ரூபா வழங்கப்படும். 88, சண்டி ரோட், யாழ்ப்பாணம். 1842

வீடும் வளவும்
காரைநகர் புது ரோட்டிலிருக்கும் வீடும் வளவும் விற்பனைக்கு இருக்கிறது. வளவின்விஸ்தீரணம் 11 1/2 பரப்பு. வீடு 3 அறைகளும் 3 விறுந்தைகளும். வாங்கவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துடன் நேரடித் தொடர்புகொள்ளவும். எஸ். குணநாயகம் ஆசிரியர், அல்வின் வீதி, காரைநகர். 1843

### தேவை

எமது ''சீதனம்'' படத்திற்கு முகவெட்டுள்ள நடிக, நடிகைகள் படங்களுடன் விண்ணப்பிக்கவும். க. சபாரத்தினம், [கலாஜோதி], 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2405

### கல்வி

வகுப்புகள்:
ஜீ. சீ. ஈ. உயர்தர/சாதாரணதர கலை/விஞ்ஞான/வர்த்தகம், சிங்களம் ஆகிய வகுப்புகளுக்கு துரித பயிற்சி அனுபவம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களால் நடாத்தப்பெறுகின்றது. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி [Jaffna Tutorial College] கைலாசபிள்ளையார் கோயிலடி நல்லூர், நெல்லியடி, கரவெட்டி. 1822

வகுப்புகள்
தபாற்கந்தோர் தலைவர், தந்தியாளர் பரீட்சைக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் பாடம் நடத்தப்படும். காலி இடங்கள் குறைவாயிருப்பதால் உடனே சேருங்கள், முந்திய பரீட்சை முடிவுகள் மிகத்திறமானவை, ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் / பிரதானவீதி, முள்ளியவளை. 1836

வகுப்புகள்
ஜி. சி. ஈ. [சாதாரணம்/உயர்தரம்] கலை/விஞ்ஞானம், சுருக்கெழுத்து, தட்டச்சு கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், தையல், சிங்களம். இலண்டன், இலங்கைப் பட்டதாரிகளால் காலை மாலை நடாத்தப்படுகின்றன. பார்வையிட்டுச் சேரவும். நிர்வாகி, வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை/நெல்லியடி/உடுப்பிட்டி. 1840

## ஈராக் உதவி அளிக்கும்

கெய்ரோ, மே 22

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ஈராக் உதவிசெய்ய முன்வந்துள்ளது. தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றை ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ஈராக் அளிக்கும். ஈராக்கின் துணைப்பிரதமர், இங்கு ஜனதிபதி நாஸருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டது.


ராதா மணி மார்க்

# கேசரோகநிவாரணதைலம்

கூந்தல் உதிர்தல், பூச்சிவெட்டு, புழுவெட்டு, ஆகிய கேச, ரோகங்களைக் குணப்படுத்தி பாதிக்கப்பட்ட இடங்களில் தலைமயிரை வளர்க்கும் சக்திவாய்ந்த கூந்தல் தைலம் எம்மிடம் உண்டு. இத்தைலத்தைப் பாவித்து வந்தால் கூந்தல் நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரும். மேற்கூறப்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட அநேகர் இத்தைலத்தைப் பாவித்து குணமடைந்துள்ளனர்.

எப்பொழுதும் எம்மிடம் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

# எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச் சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


## கிணற்றினடியில் நச்சுக்காற்று?
### சிறுமியும், கிழவரும், கோழியும் பலி

உடுப்பிட்டி, செவ்.

கிணற்றில் தவறி வீழ்ந்த சிறுமியும், சிறுமியைக்காப்பாற்றக் கிணற்றிலிறங்கிய வயோதிபரும் கிணற்றினுள்ளேயே மாண்ட பரிதாபசம்பவம் கரவெட்டி வடக்கில் நிகழ்ந்துள்ளது. இச்சோகச் சம்பவம் சென்ற புதன்கிழமை நிகழ்ந்துள்ளது.

கரவெட்டி வடக்கு, பத்தியாவத்தை என்னும் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருக்கையில் கிணற்றினுள் தவறி வீழ்ந்த கந்தசாமி என்பவரின் மகளாகிய தவமலர் [வயது 10] என்னும் சிறுமியைக் காப்பாற்றுவதற்காக அச்சிறுமியின் பேரனை வைரமுத்து செல்லையா [வயது 65] என்னும்வயோதிபர் கிணற்றில் இறங்கி, காப்பாற்றுவாரெவருமின்றி கிணற்றினுள்ளேயே மரணமானார். சிறுமியும் கிணற்றில் விழுந்த சில நேரத்தில் மூச்சுத்திணறி மாண்டார். இவர்கள் இருவரையும் காப்பாற்றுவதற்காகக் கிணற்றில் இறங்கிய க. சுப்பிரமணியம் என்பவர் சுவாசிக்கமுடியாத நிலையில் பிறரால் காப்பாற்றப்பட்டார்.

இக்கிணற்றின் அடித்தளத்திலே நச்சுவாயு வீசிக்கொண்டிருப்பதாகவும், மூச்சுத்திணறுவதாகவும் கிணற்றில் இறங்க முயன்றவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து பருத்தித்துறைப்பொலிஸார் பருத்தித்துறைகுப்பை மடத்தைச் சேர்ந்த மீனவர்களின் உதவியுடன் தூண்டில் மூலம் இரு சடலங்களையும்கிணற்றிலிருந்து மீட்டனர். பொலிஸார் கிணற்றினுள் ஒரு கோழியை விட்டுப் பரீட்சித்தபொழுது இரு நிமிடங்களில் அக்கோழி துடிதுடித்து இறந்துவிட்டது மந்திகை அரசினர்வைத்தியசாலை பிரதம டாக்டர் பிரேத பரிசோதனை நடத்திஞர். பிரஸ்தாப சடலங்களின் உள்ளுறுப்புகள் கொழும்பில் பரிசோதனை செய்யப்படுவதற்காகச் சேகரிக்கப்பட்டன. கிணற்று நீரும், இறந்த கோழியும் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

மரணவிசாரணை நடாத்திய பருத்தித்துறைப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வி. பி. இராஜரத்தினம, பெற்ருேர் இம்மாதிரி ஆழமான அபாயகரமான கிணறுகளில் தமது பிள்ளைகளைத் தண்ணீர் அள்ள விடுவதைக் கண்டித்தார். கரவெட்டி வடக்கு கிராம சேவையாளர் திரு. ஆ. தாமோதரம்பிள்ளை, க. சுப்பிரமணியம், சிறுமியின் பெற்ருேர் உட்பட வேறு பலரும் சாட்சியமளித்தனர். பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா சாட்சிகளை ஆஜர்செய்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. வி.பி.இராஜரத்தினம் விபத்திஞல் ஏற்பட்ட மரணங்களெனத் தீர்ப்பளித்தார். பிரஸ்தாப கிணற்றையும் பொதுமக்கள் பாவிக்கக்கூடாது என்று கோரப்பட்டுள்ளது.

## வெளி நோயாளர் கஷ்டம்

நாரந்தனை, செவ்வாய்

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர்கள் அதிகரிப்பதைத் தொடர்ந்து வெளிநோயாளர்கள் தங்கி நிற்பதற்கு இடவசதி போதாமலுள்ளது. சில சமயங்களில் நோயாளிகள் வெளியே மர நிழல்களில் கூட தங்கி நிற்கவேண்டியுள்ளது. இதனுல் வெளிநோயாளர் [illegible] கட்டடத்தை விஸ்தரிக்க வேண்டுமென பல கழக சேவாசங்கங்கள் அரசாங்கத்தை கேட்டுள்ளன.

## புதிய நிர்வாகிகள்

பூநகரி, செவ்.

பூநகரி நாச்சிக்குடா முகிதீன் பள்ளிவாசல் சங்கத்தின் புதிய வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. க.அப்துல் ஜப்பார், உபதலைவர் திரு. இ. அசனுலெப்பை, காரியதரிசி திரு. மு. அப்துல்லதீப், உபகாரியதரிசி திரு. வா. அப்துல் மஜீத், பொருளாளர் திரு. மு. யூ. பாருக். பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

கொழும்பு, புதன்

துறைமுக நாவாய் இயக்குநர் கழகத்தின் நான்காவது ஆண்டுப் பொதுக்கூட்டம் துறைமுக அரசாங்க அதிகாரசபை மின்சாரக் கட்டிடத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத்தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்- திரு. இராபர்ஞந்து. உபதலைவர்- திரு.லோபர்ஞந்து. பொதுச்செயலாளர்- திரு.ஆ. செல்வமாணிக்கம். உபசெயலாளர்- திரு. சு. நாகலிங்கம் பொருளாளர்- திரு. சி. செல்லத்துரை. உபபொருளாளர்-திரு. மு. நடராசா. ஒன்பது பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## பரிசுக்கிண்ணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். அரசாங்க உதைபந்தாட் சங்கத்தாரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டிய தபால் இலாகா கோஷ்டிக்கும் இ. போ. ச. கோஷ்டிக்கும் பரிசளிப்பு விழா இம்மாதம் 25-ந் திகதி யாழ். திறந்த வெளி அரங்கில் நடைபெற இருக்கிறது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமாகாண அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா கலந்துகொள்வார் திரு ஜி ஜி. பொன்னம்பலத்தின் வெற்றிக்கிண்ணமும், டாக்டர் சுப்பிரமணியத்தின் வெற்றிக்கிண்ணமும் பரிசாக வழங்கப்பட இருக்கின்றன. அன்று மாலை சினேகபூர்வமான உதைபந்தாட்டமும் நடைபெற இருக்கிறது.

வட வியட்னும்

## தலைவர்களுக்கு ஜோன்சன் அழைப்பு

வாஷிங்டன், மே 23

அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன், வியட்னமில் சமாதானத்தை நிலைநாட்ட உதவுமாறு வட வியட்னம் தலைவர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

'வியட்னமில் ஆக்கிரமிப்பாளியை எதிர்க்கும் அதே நேரத்தில் அமெரிக்கா. சமாதானத்துக்கான கதவைத் திறந்தபடியே வைத்திருக்கும், என ஜோன்சன் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ரயில் கட்டணம் உயரும்

புதுடில்லி, மே. 22

இந்தியாவில் ரயில் கட்டணங்களை உயர்த்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ரயில் மூலமான சகல பிரயாணக் கட்டணங்களும் சரக்குகளுக்கான கட்டணங்களும் உயர்த்தப்படும். கட்டண விபரங்கள் இன்று அறிவிக்கப்பட்டன, பிளாட்பாரத்துக்கானகட்டணம் 15 சதமாக உயர்த்தப்படும்.

## விளம்பரம்

### பரந்தன் ரசாயனக் கூட்டுத் தாபனம்

முதலாம் தரக் கிரேட்டிலுள்ள மேசன்மாருக்கு நாளாந்த அடிப்படையில் வேலை செய்ய, காலி ஸ்தானங்கள் உண்டு. உற்பத்தி முகாமையாளர், பரந்தன் ரசாயனக் கூட்டுத் தாபனம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் 1967ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதியிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ விண்ணப்பிக்கவும்.

உற்பத்தி முகாமையாளர்
20-5-1967 1794

### இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

ரூபா 300/- இனும்! ரூபா 300/- இனும்! எங்களுடைய அதிர்ஷ்டலாபக் கூட்டுறவில் சேருங்கள். உங்கள் திடீர் தேவைகளுக்கு திடீர் பண உதவி உண்டு. விபரங்களுக்கு: 10 சத முத்திரையுடன்
க. சபாரத்தினம்,
160, ஆஸ்பத்திரி வீதி,
1100 யாழ்ப்பாணம்.

### ரப்பர் ஸ்டாம்பு

ரப்பர் ஸ்டாம்புகள், வீட்டுப் பெயர்கள் திறமான முறையில் செய்து கொடுக்கப்படும்.

கலாஜோதி,
160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1100

## புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், புதன்

''இ. போ. ச. புதிதாக ஆரம்பிக்கும் பஸ் சேவைக்கு கூடுதலாகக் கட்டணம் அறவிடுகிருர்கள். வழக்கமாக மற்றைய சேவைகளுக்கு அறவிடுவதுபோல் புதிதாகத் தொடங்கும் சேவைகளுக்கும் அறவிட இ. போ. ச. ஒழுங்கு செய்தல் வேண்டும்'' என கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை அச்சுவேலி-வளலாய் பஸ் சேவையை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார். வளலாய் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற கூட்டத்திற்கு அச்சுவேலி கிராமசபைத் தலைவர் சி. த. சபாரத்தினம் தலைமை வகித்தார்.

## 13-வது வருடாந்த பரிசளிப்பு விழா

கரவெட்டி, செவ்.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் 13-வது வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 28ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட மாகாண அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பரிசில் பெற்ற மாணவர்களுக்கு திருமதி அபயசேகரா பரிசில்களை வணங்குவார். விழாவின் முடிவில் கல்லூரி மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## காங்கேசன்துறைக்கு மாக்கப்பல் வருகிறது

காங்கேசன்துறை, செவ்.

மபவு ஏற்றிவரும் அவுஸ்திரேலிய கப்பல நாளை காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வந்து சேர்கிறது.

கொமாஸ்ர்எனும் இக் கப்பல் 9,510தொன் மாவை ஏற்றி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காபார் குடா இஸ்ரேலுக்கு மூடப்பட்டது

## ஜனதிபதி நாஸர் அறிவிப்பு

### அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது

கெயிரோ, மே 23

அக்காபார் குடா இஸ்ரேல் கப்பல்களுக்கு மூடப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபுக் குடியரசு அறிவித்துள்ளது. அத்துடன் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லும் பிற கப்பல்களுக்கும் இந்தத் தடைசெல்லுபடியாகுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

ஐக்கிய அரபுக்குடியரசுத் துருப்புகளின் தலைமைக் காரியாலயத்துக்கு ஜனதிபதி நாஸர் விஜயம் செய்த போது, அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அவருடன் கூடவே ஐக்கிய அரபுக் குடியரசின் முதலாவது உதவி ஜனதிபதி பீல்ட் மார்ஷல் ஹக்கீம் அமீரும் சென்றிருந்தார்.

**அமெரிக்கா எச்சரிக்கை**

இதற்கிடையில் அக்காபார் குடாவையும், இஸ்ரேலிய துறைமுகமான இலாக்கையும் ஐ. அ. குடியரசு போக்குவரத்துக்குத் தடைசெய்தால், அத்தகைய நடவடிக்கையைஅமெரிக்கா பாரதூரமாகக் கருதுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. அக்காபார் குடாவைச் சர்வதேச துறைமுகமாகவே அமெரிக்கா கருதுவதாகவும் அவ்வெச்சரிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது.

ஜெரூசலத்தில் இஸ்ரேல் பிரதமர், எல்லையிலிருந்து ஐ. அ. குடியரசு தனது துருப்புகளை வாபஸ் பெற்ருல், இஸ்ரேலும் அவ்விதமே செய்யத்தயாராகவிருப்பதாகக் கூறியுள்ளார். ஐ. அ. குடியரசுக்கு ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட்மேற்கொண்டுள்ள விஜயம் சமாதானத்துக்கான ஒரு முயற்சியென இஸ்ரேல் பிரதமர் வரவேற்ருர்.

**கெயிரோவுக்கு யுதாண்ட்**

இதற்கிடையில், யுதாண்ட் நேற்று கெயிரோ புறப்பட்டார். இன்று அவர் அங்கு போய்ச் சேருவார். கெயிரோவுக்குப் புறப்படுவதற்கு முன் அவர், அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய, பிரான்ஸ் பிரதிநிதிகளுடன் கலந்து பேசினுர். இஸ்ரேல் தூதுவரையும் சந்தித்தார்.

தமது கெயிரோ விஜயத்தில், ஐ. அ. குடியரசுக்கும் இஸ்ரேலுக்குமிடையேயுள்ள எல்லையில் ஐ. நா. சமாதானப்படை ஒன்றை நிறுத்துவது பற்றி யுதாண்ட் ஐ. அ. குடியரசு ஜனதிபதி நாஸருடன் ஆலோசிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

**பகிஷ்கரிப்பு**

ஐ. அ. குடியரசு—இஸ்ரேல் எல்லையில் ஐ. நா. சமாதானப்படை ஒன்றினை நிறுவுவது பற்றி ஐ. நா பொதுச்சபையின் விசேஷ கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டது.

ஐ. நா. அவசரகாலப் படை பற்றி ஐ. நா. பாதுகாப்புச்சபையில் விவாதிக்கப்படும் பட்சத்தில், பாதுகாப்புச்சபையின் கூட்டத்தை அரபு நாடுகள் பகிஷ்கரிக்குமென ஐ. அ. குடியரசு தெரிவித்துள்ளது.

## ‘கல்வியில் கவனம் செலுத்துங்கள்’

### இந்திய ஜனதிபதி புத்திமதி

புதுடில்லி, மே. 23

‘கல்வியில் அதிக கவனம் செலுத்துங்கள். எதிர்காலத்தை நல்ல பயனுள்ளதாக இதுவே உதவும்.’

இவ்வாறு இந்திய ஜனதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன் டில்லி மக்களால் தமக்களிக்கப்பட்டவரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினுர்.

ஆசிரியத்தொழிலில் தாம் பெற்ற அனுபவத்தைக் குறிப்பிட்டுவிட்டு அவர் மேலும் பேசுகையில், நகரசபைகள் கல்வியில் அதிக நாட்டம் செலுத்தவேண்டுமெனவும் தரமானகல்வியை இளம் சமுதாயத்தினருக்கு அளிப்பதால் குறுகிய மனப்பான்மை அவர்களிடத்தே இருந்து மறைத்துவிடும் எனவும்கூறினுர்.

டில்லி நகரமேயர் தலைமையில் நடைபெற்ற இந்த வரவேற்புக்கூட்டத்தில் பிரதமர் திருமதி இந்திராவும் கலந்துகொண்டார்.

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெற்றது.

## மந்திரவாதிகளுக்குளட்டாத படித்த பிசாசு!

ஷில்லாங், மே 23

அஸ்ஸாமில் வடக்கு லக்கிம்பூர் ஜில்லாவைச் சேர்ந்த போரிமுரி கிராமத்தில் அட்டகாசம் செய்துவரும் ஒரு பிசாசை ஸ்தலமந்திரவாதிகளால் ஓட்ட முடியவில்லை.

அப்பிசாசு கண்ணுக்குத் தென்படுவதில்லை. ஆனுல், அது ஒரு வீட்டில்தானிருப்பதைப்பல வழிகளிலும் காட்டி வருகிறது. அதுகூரைமீது கற்களையும், நிலக்கரித்துண்டுகளையும்வீசுவதாகவும், வீட்டின் சுவர்களை ஒரேயடியாக ஆட்டிக் குலுக்குவதாகவும், பாத்திரங்களிலிருந்து உணவைத் திருடுவதாகவும், சட்டைப்பைகளிலிருந்து பணத்தையும் திருடுவதாகவும் கிராமவாசிகள் கூறுகின்றனர்.

வீட்டைச்சுற்றிலும் குப்பை கூளங்கள் வீசப்படுகின்றன. தொங்க விடப்பட்டுள்ள துணிகள் திடீரெனப் பற்றி எரிகின்றன. பூட்டிவைக்கப்பட்டுள்ள பெட்டிகள் மர்மமானவகையில் உடைக்கப்பட்டு, அவற்றில் வைக்கப்பட்டவை மறைகின்றன. சில சமயங்களில் கண்ணுக்குத்தெரியாத கை ஒன்று தங்களை அறைவதாகவும் அந்த வீட்டில் உள்ளவர்கள் கூறுகின்றனர்.

எனினும், அந்த வீட்டிலுள்ள பிசாசு படித்த பிசாசு என்றே தெரிகிறது. அது அஸ்ஸாமிய மொழியிலும், ஆங்கில மொழியிலும்எழுதப்பட்ட உத்தரவுகள், எச்சரிக்கைகள் ஆகியவற்றைக் கொண்டே துண்டுக் காகிதங்களையும் போடுகிறது.

அந்த வீட்டில்உள்ளவர்கள் பிரபல பெஸ் [மந்திரவாதி] ஒருவரை அழைக்கலாமென்று பேசிக்கொண்டிருந்தபோது ஒருதுண்டுக் காகிதம் வந்து விழுந்ததென்றும், பெஸ்ஸை அழைக்கக் கூடாதென்றுஅக்காகிதத்தில் எச்சரிக்கை விடப்பட்டிருந்ததென்றும் ஒரு தகவல்கூறுகின்றது.

## ரயில்வே கட்டணம் உயர்வுக்கு எதிர்ப்பு

புதுடில்லி, மே 23

மத்திய அரசாங்கத்தின் ரயில்வே பட்ஜெட்டில், ரயில் போக்குவரத்து, பொருள் ஏற்றுமதிக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பதை வர்த்தக வட்டாரங்களும் அரசியல் கட்சிகளும் கடுமையாக விமர்சித்துள்ளன.

போக்குவரத்துக்கு கட்டணங்கள் உயர்த்தப்படுவது, சாதாரண மனிதனின் கஷ்டங்களை மேலும் அதிகரிக்குமென அரசியல் கட்சிகள் கருத்துத் தெரிவித்தன. அத்துடன் விலைவாசிகளை மேலும் உயர்த்த வழிகோலுமெனவும் அவை கூறியுள்ளன.

கட்டண உயர்வு உற்பத்தியைப் பாதிக்குமென வர்த்தக வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

## கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

வல்வெட்டித்துறை, செவ்.

அல்வாய் இந்துவாலிபர் சங்க இரண்டாவது கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இந்துவாலிபர் சங்க மைதானத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் வடமராட்சியிலுள்ள 14 கழகங்கள் பங்குபற்றுகின்றன. இப்போட்டியில் வெற்றி பெறும் கழகத்திற்கு திரு. கே. வைரமுத்து வெற்றிக்கேடயமும் திரு. கே. சோமசுந்தரம் வெற்றிக்கேடயமும் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான ஒழுங்குகளை கழகச் செயலாளர் திரு. பொ. [illegible] மேற்கொண்டு வருகி[illegible].

## பிரிட்டிஷ் தூதரகத்தை மூடுமாறு சீன உத்தரவு

பீக்கிங், மே 23

ஷாங்காயிலுள்ள பிரிட்டிஷ் தூதராலயத்தை மூடுமாறு சீன அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

பிரிட்டிஷ் தூதுவரையும் 48 மணித்தியாலத்தில் ஷாங்காயை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் பிரிட்டிஷ் அதிகாரிகளின் கொடூர நடவடிக்கைகளுக்குப் பதிலாகவே இந் நடவடிக்கையை சீன அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது

## புத்த ஜெயந்திக்காக வியட்னமில் போர் ஓய்வு

சைகோன், மே 23

புத்த ஜயந்தியை ஒட்டிய 24 மணி நேரப்போர் ஓய்வு வியட்னமில் நேற்று நள்ளிரவில் ஆரம்பமாகியது.

தமது 48 மணித்தியாலப் போர் ஓய்வு நேற்றுக் காலை 7 மணிக்கே ஆரம்பமாகிவிட்டதென வியட்காங்கியர் அறிவித்தனர்.

ஆனுல் போர் ஓய்வு அறிவிக்கப்பட்ட சில நிமிடங்களுக்குள்ளாகவே தென் வியட்னும் மலைப்பகுதிகளிலுள்ள அமெரிக்க நிலையங்கள்மீது வடவியட்னும் துருப்புகள் கடும் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கர் குற்றஞ்சாட்டினர்.

**கென்னடி கொலை விசாரணை**

## சாட்சி ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு

நாஷ்வில், மே 23

கென்னடி தகவலைப் பற்றிப் புதிய தகவலை வெளியிடும் விசாரணையை நடாத்திவரும் டிஸ்திரிக் அட்டோர்ணி திரு. ஜிம்காரிஸன் நோட்டீஸ் பிறப்பித்துள்ள ஒரு சாட்சி காரில் செல்கையில், காரைநோக்கி ஐந்து தடவை சுடப்பட்டது.

முன்னுள் நியூ ஓர்லீன்ஸ் இரவு விடுதிச் சொந்தக்காரரான 29 வயதான திரு. கோல்டன் நவல் என்பவரே இச்சாட்சி ஆவார்.

அமெரிக்க உளவு ஏஜன்ஸியான சி. ஐ. ஏக்கு கொலைச் சதியில் சம்பந்தப்பட்ட அனைவரது பெயர்களும் தெரியுமென்றும், தனது விசாரணைகளை நிறுத்துவதற்கென வழக்கறிஞர்களுக்கு அது மறைமுகமாகப் பணம் கொடுக்கப்பட்டதாகவும் திரு. காரிஸன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## குப்பம் ரயில் விபத்தில் மரணமானேர் தொகை 62

சென்னை, மே 23

ஞாயிறன்று இரவு 9-30 மணியளவில் ஜோலார்பேட்டையிலிருந்து 20 மைல்களுக்கப்பாலுள்ள குப்பம் என்ற இடத்தில் நடைபெற்ற பெங்களூர்-கொச்சி எக்ஸ்பிரஸ் ரயில்விபத்தில் மரணமானேரின் தொகை 62 ஆக உயர்ந்துள்ளது.

ரயில் பெட்டிகளின் அடியிலிருந்து மேலும் 39 சடலங்கள் மீட்கப்பட்டன. ஏற்கனவே 22 சடலங்கள் கண்டெடுக்கப் பட்டிருந்தன. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியில், காயமுற்ருேரில் ஒருவர் மரணமானுர்.

ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி, ரயில்வே மந்திரி ஆகியோர் விபத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதத்திற்காகத் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டனர்.

## ‘கேரே’ கிளர்ச்சி முறைக்கு பிரதமர் இந்திரா கண்டனம்

புதுடில்லி, மே 23

தொழிலாளர்களின் “முற்றுகைக் கிளர்ச்சியை” [கேரோ] இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கண்டித்துள்ளார்.

பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் பேசுகையில், நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பதுபற்றி மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்து வருவ

[6-ம் பக்கம் பார்க்க]

வியர்வை நாற்றம்
வியர்வைப் பருக்கள்
இவற்றை நீக்கி
உடம்புக்கு சுகந்த பரிமளம் கொடுப்பது
“சூரிய மார்க்”
வாசனை சந்தனப் பவுடர்
ஸ்நானத்துக்குப் பின்பு உடம்பில் நன்கு
பூசிக்கொள்ள உகந்தது
கிடைக்குமிடம்
சுந்தரம் பிறதர்ஸ்
கோவில் அபிஷேகப் பொருட்கள்
மருந்துச் சரக்கு விற்பனையாளர்
(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)
[illegible]3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்பம் துன்பத்தை பின்தொடருவதுபோல துன்பமும் இன்பத்தைப் பின்தொடர்கின்றது. இரவும் பகலும் போல இன்பமும் துன்பமும் தவிர்க்க முடியாதவை. அறிஞர்கள் இதனை உணர்ந்துதான் இன்பம் வந்தபோது சந்தோஷப்படுவதிலும் துன்பம் வந்தபோது துக்கப்படுவதிலும் காலத்தைச் செலவிடுவதில்லை.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

Eelanadu Naticnal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் 'பிலவங்க' நூ வைகாசி மீ 10௳ (24-5-67)

# தலைமை ஆசிரியர் பிரச்னை 2 மாதங்களில் தீரும்

## உதவி நிரந்தரக் காரியதரிசி உறுதி

யாழ்ப்பாணம், புதன் ''தலைமையாசிரியர்கள் பதவி உயர்வு பற்றியும் நிரந்தரமான தலைமை ஆசிரியர்கள் இல்லாததால் சில பாடசாலைகளின் நிர்வாகச் சீர்கேடு பற்றியும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது மிக மிக முக்கியமான தொன்ருகும். இந்தப்பிரச்னை வட பகுதியில் மாத்திரமின்றி இலங்கை முழுவதுமே உண்டாகியுள்ளது. இது சம்பந்தமாக அமைச்சு ஆலோசனை செய்தபின்னர் இதற்கான நேர்முகப் பரீட்சைகளை இப்பொழுது நாடெங்கிலும் நடாத்திவருகின்றது. இன்னும் இரண்டு மாதங்களில் இந்தப்பிரச்னை தீர்ந்துவிடும் என்பது எனது உறுதியாகும்.

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற வட இலங்கை தமிழாசிரியர் சங்க 42-ம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சின் உதவி நிரந்தரக் காரியதரிசி திரு. சிறில் கமஹே தமது பேச்சில் தெரிவித்தார். இக்கூட்டத்துக்கு சங்கத்தலைவர் திரு ச. பொன்னுத்துரை தலைமை வகித்தார்.

தலைமை ஆசிரியர் பதவியை வெளியிடங்களில் வகித்து தங்கள் சொந்த இடங்களுக்கு மாற்றலாகி வருவதற்காக அப்பதவியை விட்டு விலகி தற்போது சாதாரண ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை, தற்போது காலியாகவுள்ள தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு எந்தப் பரீட்சையுமின்றி நியமனம் கொடுக்க வேண்டுமென்று சிறில் கமஹேயிடம் மேற்படி ஆசிரியர் சங்கத்தால் கோரப்பட்டது. இதற்கு திரு. சிறில் கமஹே பதிலளிக்கையில் இந்தப்பிரச்னை பல ஆசிரியர்களையும் பாதிக்கக் கூடியதாகவிருப்பதால் முதலில் நிரந்தரமான தலைமை ஆசிரியர்களை நியமித்த பின்னர் இவர்களுக்கு நியமனம் கொடுப்பதுபற்றி ஆமைச்சுடன் கலந்தாலோசிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் வசதிகுறைந்த இடமென்றிற்கு ஓர் ஆசிரியரை இடமாற்றம் செய்யும்போது மீண்டும் அவரை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அங்கிருந்து இடமாற்றம் செய்வதாக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டால் ஆசிரியர்கள் இடமாற்றம் சுபீட்சமாகத் தீர்க்கப்படுமென திரு. சிறில் கமஹேவுக்கு மேற்படி சங்கத்தினரால் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினம் பேசுகையில், பட்டதாரிகள் அனைவருக்கும் தமது அலுவலகம் மூலம் இடமாற்ற உத்தரவு வந்துள்ளதாகவும் இந்தப்பிரச்னையைத் தன்னிடம் நேரில் தெரிவிப்பதிலும் பார்க்க ஆசிரியர்கள் தாங்கள் தொழிற் சங்கங்கள் மூலம் போராடினுல் வெற்றிகாண முடியுமெனத் தெரிவித்தார்.

அகில இலங்கை ஆசிரியர் சங்கச் சம்மேளனத் தலைவர் திரு. அ. வைத்தியலிங்கம் பேசுகையில் தென், கிழக்காசிய நாடுகளில் இலங்கையின் கல்வித்தரம் மிகமிக உயர்ந்திருப்பதாகவும், இங்கு இன்னும் 20,000 ஆசிரியர்கள் தேவையென்றும் உலகவங்கி நிபுணர்கள் தாங்கள் அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதால்புதிதாக ஆசிரியர்களை நியமிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்ருர். ஆசிரியர் கந்தையா உட்பட இன்னும்பலரும் பேசினுர்கள். [ந. நி]

## இந்திய ரூபாய் மதிப்புக் குறைப்பு

இந்திய ஆயுள் இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷனில் பொலிசிதாரர்களாக உள்ள இலங்கையர்களுக்கு, அவர்களுக்குரிய பணத்தொகையை இந்திய ரூபாயின் பழைய மதிப்புப்படி கொடுப்பது பற்றி இந்திய அரசாங்கம் அனுதாபத்துடன் பரிசீலனை செய்து வருவதாக இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். இந்த முயற்சி பாராட்டத்தக்கது.

இந்திய ஆயுள் இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷனில் பொலிசிதாரர்களாக உள்ள இலங்கையர்களுக்கு, அவர்களுக்குச் சேரவேண்டிய தொகை இந்திய ரூபாயின் தற்போதைய மதிப்புப்படிதான் கொடுக்கப்படுமென இந்திய ஆயுள் இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷன் தெரிவித்திருந்தது. இதன்படி இலங்கைப் பொலிசிதாரர்களுக்கு உண்மையில் சேரவேண்டிய தொகையில் அறுபத்திரெண்டு சதவீதமான பணம்தான் கிடைக்கும். இது இலங்கையிலுள்ள பொலிசிதாரர்களுக்கு அதிர்ச்சியளித்திருப்பதுடன் அவர்கள் மத்தியில் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டபின் இந்திய ரூபாயின் தற்போதைய மதிப்புப்படிதான் தனது பொலிசிதாரர்களுக்கு அவர்களுக்குரிய பணம் வழங்கப்படும் என்று இந்திய ஆயுள் இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷன் கூறியிருப்பது சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனுல் இந்தக் கோர்ப்பரேஷனில் பொலிசிதாரர்களாகச் சேர்ந்தவர்களின் ஆயுள் சேமிப்பில் சட்டத்தை மட்டும் கவனிப்பது நியாயமாகாது. இது தவிர இது வேற்று நாட்டு மக்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் பிறநாட்டு மக்களின் நல்லெண்ணம், நல்லுறவும் இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷன் இதுசம்பந்தமாக முடிவு செய்த போதிலும் இலங்கைப் பொலிசிதாரர்கள் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் இவ்விஷயத்தில் அனுதாபத்துடன் பரிசீலனை செய்து வருவது பாராட்டத்தக்கது. காலதாமதமில்லாமல், விரைவாக இதில் இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது.

இன்ஷுரன்ஸ் கோர்ப்பரேஷன் விஷயத்தில் மட்டுமல்ல இதர பல விஷயங்களிலும் இந்திய ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதன் விளைவுகளை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொள்வது விரும்பத்தக்கது. ரூபாயின் மதிப்புக்குறைக்கப்பட்டதால் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை என்று இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாயே பகிரங்கமாகக் கூறியிருக்கிருர். ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதால் இந்தியாவுக்கு மட்டும் நன்மை கிடைக்காததல்ல. இலங்கைக்கும்கூட பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இலங்கையின் தேயிலை விலை வீழ்ச்சிக்கும், தேயிலை வர்த்தகம் பாதிக்கப்பட்டிருப்பதற்கும் இந்திய ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டதும் ஒரு காரணம். எனவே இந்தியாவுக்கோ, இலங்கை உட்பட அதன் அண்டை நாடுகளுக்கோ எதுவித நன்மையையும் தராத ஒரு கொள்கையை இனியும் கட்டாயமாக வைத்திருக்க வேண்டியது அவசியந்தானு?

## இன்றைய நிகழ்ச்சிகள்

### திருக்குறள் மகாநாடு

சங்கானையில் நடைபெறும் திருக்குறள் மகாநாட்டின் இன்றைய நிகழ்ச்சிகள் மாலை 3-45 மணிக்கு அம்பலவாண நாவலர் அரங்கில் திரு. மு. வைரமுத்து தலைமையில் ஆரம்பமாகும் இன்றைய நிகழ்ச்சிகள்.

மாலை 3-45 மணி: இசைமணி சின்னராசா குழுவினரின் மெல்லிசை, 5-00 மணி: தமிழ் வாழ்த்து, திருக்குறள் ஓதல், வரவேற்புரை, 5-45 மணி: பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சுக்கள், 6-00 மணி: ''இளங்கோவும் வள்ளுவரும்'' பற்றி வித்துவான் சி. ஆறுமுகம், ''வள்ளுவன் வகுத்த வழி'' பற்றி திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி.யும் பேசுவார்கள். 7-00 மணி: பரிசில்கள் வழங்கல், 7-15 மணி: திருவள்ளுவர் பாமாலை, 7-30 மணி: முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் திருவாளர்கள் க. சிவானந்தம், க. நவசோதி, பண்டிதர் க. சச்சிதானந்தம், புதுமைலோலன், க. கயிலைநாதன், மு சிவானந்தம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். 9-00 மணி: நன்றியுரை, 9-40 மணி: வழக்கறிஞர் க. சுப்பிரமணியம் தலைமையில் இசை நாடக கலைநிகழ்ச்சிகள்.

ஃ ஃ ஃ

### இசைவிழா

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்று வரும் அண்ணமலை இசைத்தமிழ் மன்றத்தின் 8-ம் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்.

மாலை 5-30 மணி: நாச்சிமார் கோவிலடி கணேசன் குழுவினரின் மேள மங்கள வாத்தியம், 6-45 மணி: திரு. க. வை. தம்பு — பாட்டு, 8-00 மணி. கலையரசு க. சொர்ணலிங்கம், கலாபிமானி திரு. செ. சிவஞானம், புலவர் த. குமாரசாமிப்பிள்ளை, சங்கீதபூஷணம் ந. சண்முகரத்தினம், திரு. ப. சந்திரசேகரம் ஆகியோருக்கு பாராட்டு உபசாரம் வழங்குதல், 8-45 மணி: திருமதி சத்தியபாமா இராசலிங்கம் — பாட்டு, 10-00 திரு. ந. சண்முகரத்தினம் — பாட்டு.

ஃ ஃ ஃ

### கலைவிழா

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் நடைபெற்று வரும் பௌர்ணமி கலைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்.

யாழ். மத்தியகல்லூரி அளிக்கும் ''வீரக்குமரன்'' சரித்திரநாடகம், கனகரத்தினம் மகாவித்தியாலயம் அளிக்கும் ''பிரகலாதன்'' சரித்திரநாடகம். [ந. நி]

## நாடும் நடப்பும்

''பெயரில் என்ன இருக்கிறது?'' என்று ஆரம்பித்து ''இதைப் பற்றி திரு. அண்ணாதுரைக்கு அதிகம் தெரியும்'' என்று கூறி ''சென்னை அரசாங்கம்'' என்ற பெயரை ''தமிழக அரசு'' என்று மாற்றியது பற்றி கொழும்பிலிருந்து வெளியாகும் ''சன்'' என்னும் ஆங்கில தினசரி என்ன வெல்லாமோ தனது ஆசிரிய தலையங்கத்தில் எழுதியிருக்கிறது.

தமிழகத்தில் தமிழ் தெரியாத பிறமொழியினர், ஆங்கிலத்தில், அரசுடன் தமது அலுவல்களைச் செய்துகொள்ள வசதியளிக்கப்பட்டிருப்பதாக தி. மு. க. தலைவர்கள் கூறியிருப்பதையும் அது எடுத்துக் காட்டியிருக்கிறது. தமிழ் தெரியாதவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமல்ல இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், சிந்தி ஆகியவைகளில் மட்டுமல்ல பஞ்சாபி, குஜராத்தி மொழிகளிலும் அரசுடன் தொடர்பு கொண்டு தங்கள் அலுவல்களைச் செய்து கொள்ளலாமென தி. மு. க. தலைவர்கள் கூறியிருப்பதையும் சுட்டிக் காட்டும் அத்தலையங்கம் ''சிங்களத்தைப் பற்றி என்ன?'' என்று கேட்கிறது.

சென்னை ராஜ்யத்தில்-இல்லை, தமிழகத்தில் சிங்களம் மட்டும் தெரிந்தவர்கள் எத்தனைபேர் வாழ்கின்றனர்? இதையாவது அந்தப் பத்திரிகை எடுத்துக் காட்டி அண்ணுதுரையிடம் கேட்டால் அர்த்தமிருக்கும்.

சிங்கள மொழிக்கும் தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் ஒன்றில் ஒரு பிரிவு ஆரம்பிப்பது தமிழகத்திற்கும் இலங்கைக்கும் நல்லுறவை ஏற்படுத்த உதவும். பிரெஞ்சு, லத்தீன் மொழிகளுக்கெல்லாம் தமிழகப் பல்கலைக் கழகங்களில் இடமிருக்கிறது. சிங்களத்துக்கும் ஓர் இடமளித்தால் நல்லதுதான். சமீபத்தில் இலங்கை வந்திருந்த பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரும் இக்கருத்தை ஆதரித்திருந்தார். அவரது தலைமையில் இயங்கும் மதுரைப் பல்கலைக்கழகத்தில் சிங்களத்திற்கும் இடமளிப்பது தமிழரின் பரந்த மனப்பான்மையை உணர்த்தலாம்.

''சென்னை ராஜ்யத்தில் அதாவது தமிழகத்தில் தெலுங்கு மொழி பேசும் மக்கள் 35 சதவீதத்தினர் இருக்கின்ற போதிலும் அவர்களது மொழியைப் பற்றி அக்கறை கொள்ளவில்லையென்றும் இலங்கையில் பத்து சதவீதமான தமிழர் தமிழையும் ஓர் உத்தியோக மொழியாக்க வேண்டுமெனக் கோருவதுதான் வேடிக்கை'' என்றும் அந்தத் தலையங்கத்தில் 'சன்' பத்திரிகை கூறுகிறது.

தமிழகத்தில் தெலுங்கு மொழி பேசுவோர் தமது மொழியில் தமது அலுவல்களைச் செய்து கொள்ள வசதியளிக்கப்பட்டிருப்பதுடன் தமிழ் தெரியாதவர்கள் ஆங்கிலத்தில் தமது அலுவல்களைத் தொடர்ந்து செய்து வரவும் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தை அடுத்து தெலுங்கு மொழி பேசும் மக்கள் தமக்கென ஒரு ராஜ்யத்தையே அமைத்துக் கொண்டிருக்கின்றனர். அதுதான் ஆந்திர ராஜ்யம். அங்கு தெலுங்குதான் உத்தியோக மொழி.

இதுதவிர இந்திய அரசியல் அமைப்பிலேயே இந்தியாவின் பதினுன்கு மொழிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்திதான் இந்தியாவின் ஆட்சி

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

மொழியானுலும் இந்தி தெரியாத, இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலத்தை தொடர்ந்து உபயோகிக்க நேரு, உறுதிமொழி அளித்து வந்தார். அந்த உறுதியை சட்டமாக்குவதற்கு இப்பொழுது நகல் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இது சட்டமாகிவிடும். ஆங்கிலம் நீடிக்காவிட்டாலும் இந்தியாவில் வாழும் சிறுபான்மையினர் தங்கள் மொழி, கலை, கலாசாரம் ஆகியவைகளைப் பாதுகாக்கவும் பேணி வளர்க்கவும் இந்திய அரசியல் அமைப்பும் இந்தியத் தலைவர்களின் அரசியல் ஞானமும் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

இவற்றை மறந்தோ, மறைத்தோ தமிழகத்தில் தெலுங்கருக்கு உரிமை அளிக்காமல் இங்கு தமிழருக்கு உரிமை கேட்பதா என்றதோரணையில் அந்தப் பத்திரிகை எழுதியிருப்பது தான் வேடிக்கை.

ஃ ஃ ஃ

அவருக்கு நேற்று 66 வயது பூர்த்தியாகி 67வது வயது ஆரம்பமானது. இந்த 66 ஆண்டுகளில் எத்தனை அனுபவங்களை அவர் கண்டிருக்க வேண்டும்! 'ஒரு அனுபவத்தைச் சொல்லட்டுமா' என்ருர் அப்பெரியவர். 'ஆகா' என்றேன் நான்.

''1929ம் ஆண்டில் நேருஜி இலங்கைக்கு வந்தார் அல்லவா? அப்போது யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் அவருக்கு வரவேற்பு வைத்தார்கள். மாலைக்கு மேல் மாலைகள் நேருஜியின் கழுத்தில் குவிந்தன. மாலைகள் விழவிழ அவர் அவைகளைக்கழற்றிப்பக்கத்தில் நின்றவரிடம், கொடுத்துக்கொண்டிருந்தார். நான்மட்டும் அழகான ஒருகதர் மாலையை அவர் கழுத்தில் சூட்டினேன். அவர் புளகாங்கிதம் அடைந்தார். மாலைகள் போட்டவங்களுக்குக் கூட அப்படி அவர் வணக்கம் தெரிவிக்கவில்லை. எனக்கு இரு கைகளும் கூப்பி வணக்கம் தெரிவித்தார். அவருடன் வந்திருந்த அவருடைய பாரியாரும், மகள் இந்திரா காந்தியும் கரம்கூப்பி வணக்கம் தெரிவித்தார்கள். அந்தச் சம்பவம் இன்னும் பசுமையாக நினைவிருக்கிறது.''

அவர் ஒரு கைத்தறியாளர். முரசு மோட்டையில் குடியேறி விவசாயியாக வாழ்ந்தாலும் இந்த வயதிலும் கைத்தறியை அவர் கைவிடவில்லை. ''ஆத்மீக வாழ்வுடன் இறைவன்பால் இடையரு அன்பு பூண்டொழுகி நல்வாழ்வு வாழ வேண்டும்'' என்பது அவர் கூறும் மந்திரம்.

—ஊர் சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்டில் இந்திய பிரதமர் இந்திரா இங்கு வருகிருர்

கொழும்பு, செவ்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இவ்வருடம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயஞ்செய்ய இருக்கிருர்.

இலங்கைப் பிரதமரின் அழைப்பை ஏற்று இலங்கை வரும் திருமதி இந்திரா காந்தி, இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றி இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்துவார்.

திருமதி இந்திரா காந்தியின் இலங்கை விஜயத்திற்கான ஒழுங்குகளை இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் அதிகாரிகள் இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்து தயாரித்துவருகின்றர்.

திருமதி இந்திரா காந்தியுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. எம். ஸி. சக்ளாவும் இலங்கைக்கு வருவார்.

## அக்கராயன்குளத்தில் மேலும் 50 ஏக்கர் நிலம்

### விவசாய விருத்திக்கு காந்தி சேவாசங்கம் திட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அக்கராயன் குளத்தில் காந்திசேவா சங்கத்துக்குள்ள 25 ஏக்கர் காணியுடன் மேலும் 50ஏக்கர் காணியை அரசாங்கத்திடமிருந்து பெற்று விவசாயத்தை விஸ்தரிப்பதோடு உபஉணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய சங்கம் முயற்சி எடுக்கவேண்டும் என்றதீர்மானம் நேற்றுக்காலை நடைபெற்ற அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் 18-ம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது-

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு திரு. கு. நேசையா தலைமைவகித்தார். அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் காந்திஜியின் 100-வது ஆண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் கொண்டாட ஒழுங்குகள் செய்வதென்றும், இவ்விழாவுக்கு தமிழ் நாடிலிருந்து திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனை அழைப்பது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புது வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவில் தலைவராக முதலியார் செ. முத்துத்தம்பியும். உபதலைவர்களாக கு. நேசையா ச. சோமசுந்தரம் ஆகியோரும், பொதுச் செயலாளராக திரு. எஸ். சிறீனிவாசனும், பொருளாளராக திரு. ஆர். வேலாயுதமும் தெரிவு செய்யப்பட்டதோடு 7 பேரைக் கொண்ட நிர்வாகசபைஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. காந்தி நிலைய மேற்பார்வையாளராக திரு. சி. க. வேலாயுதபிள்ளை தெரியப்பட்டார். [ந. நி.]



## 42 ஆண்டுகள் ஆசிரிய சேவை

புத்தூர், செவ்

42 வருடகால. ஆசிரிய சேவையின்பின் ஒய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு. பொன்னம்பலத்துக்கு புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் ஒரு பாராட்டு வைபவம் நடத்தப்பட்டது.

வைபவத்திற்குத் தலைமை தாங்கிய கல்லூரி அதிபர் திரு. அ. மண்டலேஸ்வரன் பேசுகையில், திரு. பொன்னம்பலத்தின் திறமையான சேவையையும் இனிமையான சுபாவத்தையும் பாராட்டிப் பேசினர்.

ஒய்வுபெறும் அதிபருக்கு பொன்னுடை போர்த்திப் பாராட்டுரைவழங்கிய திரு. ம. வைத்தியலிங்கம் திரு. பொன்னம்பலம் ஆசிரிய பரம்பரையில் பிறந்தவரென்றும் அவரது அறிவாற்றல் பலரையும் கவர்ந்துவந்தது எனவும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் திரு. அ. ச. குமாரசுவாமி, திரு. இ. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் ஆசிரியர் சார்பிலும் மாணவர் சார்பிலும் வாழ்த்துக்கள் வழங்கினர்.

முன்னைநாள் அதிபர்கள் திரு. சு. குமாரசுவாமி, திரு. ச. வீரசிங்கம் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினுர்கள். திரு. பொன்னம்பலம் நன்றி கூறினுர்.

யாழ். நகரபஸ்நிலையபடு கொலை

## சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்: தொடர்ந்து எதிரிகள் ரிமாண்டில்

யாழ்ப்பாணம், புதன்

'ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளிகளினதோ, பிரேதங்களினதோ நலனைக் கவனிப்பதற்குமுன் அவர்களிடமுள்ள பொருட்களைப்பற்றியே ஆஸ்பத்திரியில் கடமையாற்றும்சிலசிறு ஊழியர்கள் அக்கறையுள்ளவர்களாக இருக்கிருர்கள். என நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். நகரப்பஸ் நிலையப் படுகொலை வழக்கு விசாரணையின்போது யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்திரு. மொகமட் ஜமீல் தெரிவித்தார்.

இம்மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் வைத்து வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கிட்டிணன் என்ற 24 வயது வாலிபனைக் குத்திக் கொலை செய்ததாக கணபதி கிருஷ்ணபிள்ளை செல்லத்துரை குணரத்தினம், கணபதி பஞ்சலிங்கம் ஆகிய மூவர்மீதும் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிசாரால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பொலிஸ் தரப்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் ஆஜராகியிருந்தார்.

மரணமான கிட்டிணன் கொலைசெய்யப்பட்டபோது போட்டிருந்ததாகச் சொல்லப்பட்ட 'டெரிலின்' சேட் ஆஸ்பத்திரியில் காணுமற்போய் பின்னர் இரத்தம் கழுவப்பட்ட நிலையில் வார்ட்டொன்றின் குளியலறையில் இருந்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டபோதே மாஜிஸ்திரேட்திரு. ஜமீல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வழக்கு விசாரணையின் போது மரணமானவரைப் பிரேதபரிசோதனை செய்த யாழ்ப்பாணம் சட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் என். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில்தெரிவித்ததாவது-

மரணமானவரை நான் பிரேதபரிசோதனை செய்தபோது அவரது முதுகில் சுமார் 5 அங்குல ஆழமான கத்திக்குத்து அடையாளமிருந்தது. மரணமானவர் கத்தியால் குத்தப்பட்டபோது போட்டிருந்ததாகச் சொல்லப்படும் சேர்ட்டின் பின்புறத்திலுள்ள துவாரமும், மரணமானவரின் முதுகிலுள்ள குத்தப்பட்ட அடையாளமும் ஒரேமாதிரியானவையாக இருக்கின்றன. மரணமானவர் குத்தப்பட்டபோது இந்தச் சேர்ட்டை அணிந்திருக்கலாம். அவர் கத்தியால் குத்தப்பட்ட பின்னர் சுமார் 50 யார் தூரத்திற்கு ஓடியபின்னர் இறந்திருக்கலாம்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் குலசிங்கம், டாக்டர் சுரேந்திரகுமார் ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் அடுத்தமாதம்3ந்திகதிவரை எதிரிகள் மூவரையும்தொடர்ந்து ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் ஜூன் மாதம் 3-ம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார். [ந. நி]

---

## தேயிலை ஏற்றுமதி

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்று முதல் தடவையாக தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

'மொக்காச்மோ' என்ற ரஷ்யக்கப்பலில்1000தொன் நிறையுள்ள 14,000பெட்டி தேயிலை ஏற்றப்பட்டது.

கரவெட்டி

## 5லட்சம்ரூபாசெலவில் அத்துளுகுளத்திட்டம்

உடுப்பிட்டி, செவ்.

கரவெட்டி கிழக்கு அத்துளுகுளத்தில் பிரமாண்டமான முறையில் நீர்ப்பாசன, குழாய்நீர்த்திட்டம் உருவாகி வருகின்றது. கரவெட்டிப்பகுதி மக்கள் பலவருட காலமாகக் குடிக்க நீரின்றிச் சுமார் நான்கு மைல்தூரம் நடந்துசென்று நீர் அள்ளி வருகின்றனர். சென்ற 15 வருடங்களுக்கு முன்னர் பருத்தித்துறை எம். பி.யாகவிருந்த காலஞ்சென்ற திரு. பொன் கந்தையாவின் விடாமுயற்சியினுல் அத்துளுகுளம் மூலம் கரவெட்டிப் பகுதிக்குக் குழாய்மூலம் நீர் வழங்குவதற்கான மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. தற்பொழுது உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் எடுத்த தீவிர முயற்சிகளின் பயனுக பிரஸ்தாப மசோதாவை அரசாங்கம் செயல்படுத்த முன்வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அரசாங்க நீரியல் நிபுணர்கள் இம்மாதம் 2-ம் திகதி முதல் அத்துளுகுளத்தில் ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர். இவர்களின் இவ்வாராய்ச்சிகள் எதிர்வரும் 24-ம் திகதியுடன் முடிவடையும். இந்த நிபுணர் குழுவில் நீர்ப்பாசன என்ஜினியர் திரு. ஜெகந்நாதன் நீர்ப்பாசன சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். ஜோதிநாதன், இயந்திர இயக்குநர் திரு. பி. கே. சிறிசேனு ஆகியோர் இங்கு வந்துள்ளனர். நெல்லியடிப் பட்டினசபையின் பாதுகாப்பிலிருக்கும் இக்குளத்தின் தென்மேற்கு மூலையில் சுமார் 15 அடி ஆளமுள்ள புராதன கிணறு ஒன்று இருப்பதாகவும் இதனை இரண்டு பெரிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் 3 மணித்தியாலயத்திற்கு ஒருமுறை இறைத்தபொழுதிலும் நீர்மட்டம் குறையாமல் அப்படியேயுள்ளதாகவும் நமது நிருபரிடம் தெரிவிக்கப்பட்டது. மேலும் குளத்தின் பாதுகாப்பு மதிலுக்கண்மையில் இன்னுமொரு வற்ருத கிணறு இருப்பதாகவும் அக்கிணற்றுக்கும், நிலாவரைக்கும்சம்பந்தம் இருப்பதாகக் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் குளத்தின் அணைக்கட்டின் நான்குதிசைகளிலும் கிணறுகள் காணப்படுகின்றன.

நீரியல் நிபுணர்கள் தமது அராய்ச்சிகள் முடிவுற்றதும் ஆரசாங்கத்திற்கு விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள். இதன்பின்னர் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் அத்துளுகுளத்தில் நீர்ப்பாசன, குழாய்நீர் விநியோகத்திட்டம் அமுலாக்கப்படும். இதன்மூலம் நெல்லியடி, கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும், விவசாயிகளும் பெரிதும் பயனடைவர்.

## 'உழவுத் தொழிலை மதிக்காததினுல் நாம் கீழ்நிலை அடைந்தோம்'

### சங்கானை திருக்குறள் மாநாட்டில் வட்டுக்கோட்டை எம். பி, பேச்சு

சங்கானை, செவ்.

''கம்பனும் வள்ளுவனும் தமிழ் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்ருர்கள். கம்பராமாயணமும் திருக்குறளும் ஒத்த கருத்துடையதாக இருக்கின்றன. திருவள்ளுவர் திருக்குறளில் காட்டிய வாழ்க்கை முறைப்படி வாழ்ந்து மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பவன் இராமன். இவ்வாழ்க்கை முறைகளுக்கமைய இராமன் வாழ்ந்தபடியால் தான் அவன் மனிதனுகப்பிறந்தும் தெய்வத்திற்குச் சமானமாக மக்களால் மதிக்கப்பட்டான். திருக்குறள் சாதாரண வாழ்க்கை நூல்மட்டுமல்ல. பௌதிகம். புவியியல், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளிலும் உயர்ந்த நூலாக விளங்குகின்றது'' என்று சங்கானை திருக்குறள் விழாவில் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் வித்துவான் பொன். முத்துக்குமாரன் கம்பனும் வள்ளுவனும் என்னும் பொருள்பற்றிபேசுகையில் கூறினுர்.

தமிழ் மறைக்கழகத்தலைவரும் கிளிநொச்சிப்பாராளுமன்ற உறுப்பினருமான பண்டிதர் க. பொ. இரத்தினம் அவர்களின் தலைமையில் விழா ஆரம்பமானது.

''நீதி நூலாகவும், வழிகாட்டி நூலாகவும், இலக்கியச் சிறப்பு, சொல்வளம் மிக்கதாகவும் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்று விளங்குவது திருக்குறள்

இப்போதெல்லாம் பொருளாதாரம், அரசியல் படிப்பவர்கள் பெரும்பெரும் நூல்களை வாங்கிப் படிக்கிருர்கள். ஆனுல் வள்ளுவரோ இவைகளைக் குறள் மூலம் காட்டினுர். உழவுக்கும் தொழிலுக்கும் மக்கள் முதலிடம் கொடுக்க வேண்டும் ஆனுல் நம்மவர் இது ஓர் இழிதொழிலென எண்ணுகிருர்கள். இதன் காரணமாகத்தான் எம்நாடு மிகக் கீழ் நிலை அடைந்துள்ளது. உழவுத் தொழிலை நாம் மதித்து வாழ்ந்திருந்தால் எமக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலை ஒருபோதும் ஏற்பட்டிராது. இன்னும் 10- ஆண்டுகள் இந்நிலை நீடித்தால் எம்மவர் மாண்டு மடியவேண்டியதுதான்'' எனவிழாவைத் தொடக்கிவைத்துப் பேசிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினுர்.

வல்வைச் சமபவம

## பொலிஸ் அதிபருடன் சுப்ரின்டன்ட் ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டித்துறை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமான சிவஞானசுந்தரம் என்னும் இளைஞனின் மரணம்பற்றி விசாரணை நடத்திய பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராஜா இளைஞனின் மரணம் ஒரு 'கொலை' எனத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து இந்த விசாரணைபற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுடன் கலந்தாலோசிக்க வடமாகாண பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுமாலை கொழும்பு பயணமானுர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் அழைப்புக்கிணங்கவே சுப்பிரின்டன் திரு. சுந்தரலிங்கம் கொழும்பு சென்றுள்ளதாகத் தெரிகின்றது. நாளை காலை திரு. சுந்தரலிங்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைச் சந்தித்துப் பேசுவார். [ந. நி]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். ஆஸ்பத்திரி சிரமைப்பு

# 100 மாணவர்களின் சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரி வளவு சிரமதான மூலம் சிரமைக்கப்பட்டது. இச்சிரமதானத்தில் பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த 100 மாணவர்கள் மேற்கொண்டனர். யாழ். மாவட்ட கல்வி அதிகாரிகள் இந்த 100 மாணவர்களையும் தெரிவு செய்தனர்.

நோயாளிகள் வசதியாக உட்கார சிமெந்து வாங்குகள் அமைத்தல், ஆஸ்பத்திரி வளவைத் துப்புரவு செய்தல், பூந்தோட்டம், புற்றரை அமைத்தல் போன்ற வேலைகளை அவர்கள் மேற்கொண்டனர்.

ஆஸ்பத்திரி வளவுசீர்கேடாகவும் அசுத்தமாகவும் இருப்பதாகவும், நோயாளிகள் இருக்க வசதியாகசிமெந்து வாங்குகள் அமைப்பதுடன் ஆங்காங்கே மலர்ச் செடிகள் நாட்டி அழகும் வசதியும் செய்யவேண்டுமென்றும், இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக்கேட்கவேண்டுமென ஆஸ்பத்திரிக்கமிட்டியின் கடந்த கூட்டத்தில் கமிட்டி அங்கத்தவர் முதலியார் திரு. செ. முத்துத்தம்பி பிரேரணை கொண்டுவந்ததும், இச்சிறு காரியங்களுக்கெல்லாம் அரசாங்கத்தை நம்பியிராமல் சிரமதானமுறையில் இவற்றைச் செய்ய முயலவேண்டுமென்றும், பாடசாலை அதிபர்களுக்கு இதுபற்றி எழுதி இச்சிரமதான இயக்கத்திற்கு வழிவகை செய்யவேண்டுமெனக் கேட்பதெனவும் கமிட்டித்தலைவர் திரு. மு. வைரமுத்து யோசனை கூறியதும், பொதுவேலைப் பகுதியாரை இவ்விஷயத்தில் உதவிகோரலாமென ஆலோசிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## 'கேரோ' . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

றாக அவர் கூறினார்.

இந்தக் கிளர்ச்சியைத் தொழிலாளர் தமது கோரிக்கைகளைப் பயன்படுத்தும் ஆயுதமாக நீண்டகாலம் உபயோகிக்க முடியாது என்றார் இவர்.

'கேரோ' கிளர்ச்சி என்பது சம்பந்தப்பட்ட அனைவருடைய வாழ்க்கையையுமே பாதிப்பதாகும். தொழிலாளருக்குக் குறைகள் இருக்கக் கூடும். ஆனால் அதற்கு முற்றுகைக் கிளர்ச்சி பரிகாரமாகாது. இவ்வாறு கூறினார் திருமதி இந்திரா காந்தி.

## பீடிப்புகையிலை கொள்வனவு

அளவெட்டி, செவ்.

வலி வடக்கு விவசாயிகளிடமிருந்து அடுத்தமாதம் 13ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரை பீடிப்புகையிலையைக் கொள்வனவு செய்ய விவசாயப்பகுதியினர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். 'சீக்கிரெட் புகையிலை அல்லது உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்த விவசாயிகளிடம் மட்டும், முன்பு பதிவுசெய்த முறைப்படி பீடிப்புகையிலை கொள்வனவு செய்யப்படும் என விவசாய இலாகாப் பகுதியாளர் அறிவித்துள்ளனர். வழமைபோல மாவிட்டபுரம் சிகரெட் புகையிலைச் சங்கத்தில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களால் பீடிப்புகையிலைகொள்வனவு செய்யப்படும். இப்பகுதியில் வழமையிலும் பார்க்க இவ்வாண்டு பீடிப்புகையிலை அதிக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## அனலைதீவில் சிரமதானம்

அனலைதீவு, செவ்.

அனலைதீவு — புளியந்தீவு இணைப்புப்பாலம் சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டது. அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் மூன்றுதினங்கள் இச்சிரமதானத்தில் ஈடுபட்டனர். இச் சிரமதானமூலம் ரூ. 300 மிச்சப்படுத்தப்பட்டது. இவ்வேலையை இயக்கத்தலைவர் திரு. பே. கணபதிப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

## மதுவிலக்கு

பம்பாய், மே. 22

சென்னையில் மதுவிலக்குக் கொள்கைபற்றிப் புனராலோசனை செய்யப்படுமென அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பம்பாயில் ஒரு வரவேற்பில் கூறினர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை இருந்தும் குழந்தைக்கு அநாமதேயப் பெயர்

## தனது தவறே காரணம் என வருந்துகிருர் தாய்

சாவகச்சேரி, செவ்வாய் விவாகமான ஒரு பெண்ணுக்கு திருமணமாகாதவர் என்றும், அவரது குழந்தைக்குத் தந்தை இல்லையெனவும் பதியப்பட்டதாம். சிங்களத் தாதியின் அரைகுறைத் தமிழ் விளங்காமல், சும்மா சமாளிப்பதற்காக 'இல்லை' என்ற ஒரு வார்த்தையை ஒரு பிரசவத்தாய் சொன்னதுதான் இதற்கெல்லாம் காரணம். இது 1950-ம் ஆண்டு நிகழ்ந்தது.

அந்தக் குழந்தையின் பிறப்புப்பத்திரத்தை இப்போது தான் எடுத்ததாகவும், அதில் மேற்கண்ட தகவல்களைத் தெரிந்து அதிர்ச்சியும் வருத்தமும் அடைவதாகவும் அப்பெண் நமது நிருபரிடம் கூறினர். பின்னரும் தாம் நான்கு குழந்தைகளைப் பிரசவித்ததாகக் கூறும் அப்பெண்மணி, மற்றப் பிள்ளைகளின் பிறப்புப் பத்திரங்களில் அப்படி நிகழவில்லை எனவும், தாய் முறைப்படி விவாகமானவரென்றும், கணவன் பெயரும் பதியப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

நுணுவில் மேற்கைச் சேர்ந்த ஆசைப்பிள்ளையின் மனைவியான தெய்வானைப் பிள்ளை என்ற இப்பெண் பல நாட்களாக இத்தவறு பற்றி மிகக் கடுமையாகச் சிந்தித்ததாகவும், பின்னரே தவறுக்குரிய காரணம் தெரியவந்ததென்றும் கூறினர். தாம் தமது முதற் பிரசவத்துக்காக அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவும், அங்கு ஒரு சிங்களத் தாதி அப்போது பணியாற்றியதாகவும், பிரசவத்தின்பின் அத்தாதி ஏதோ கேட்டதாகவும், அரைகுறைத் தமிழ் தமக்குச் சரியாக விளங்காமற்போகவே 'இல்லை' என்று சொல்லிச் சமாளித்ததாகவும் சோகத்துடன் அவர் கூறினர்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
பாயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர். - விஜயா
நடித்த
தாயின் மடியில்

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
David Niven
in
CAPTIVE CITY

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
THE LIVELY SET
9-45 p. m.
பியார் - கி - பியாஸ்
முதல் சினிமாஸ்கோப்
ஹிந்திப் படம்


## திறப்புக்கோர்வை யாருடையது?

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் மரக்கறி மார்க்கட்டுக்குள் நேற்று திறப்புக் கோர்வையொன்று அராலி கிழக்கைச் சேர்ந்த திரு. சி. இராசதுரை என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.


வியாபாரம பெருக
விளமபரம செய்க


## டிக்கட் இல்லாததால் பிரயாணிகள் ஏற்றப்படவில்லை

சுன்னுகம், செவ். பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, அச்சுவேலி, வசாவிழான், கட்டுவன், ஏழாலை, மல்லாகம் ஊடாக சுன்னுகத்திற்குச் சென்று பிற்பகல் 6-15க்குப் புறப்படும் பஸ் சென்ற சனிக்கிழமை வழக்கமாகத் தினசரி பிரயாணம் செய்யும் உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், பொது சனங்கள் அடங்கிய சுமார் 20பேரை ஏற்றிச்செல்லாமல் சென்றுவிட்டது. காரணம் டிக்கட் புத்தகத்தில் டிக்கட் இல்லாததையேயாகும்.

சுன்னுகத்திலிருந்து இப்பஸ்ஸைநம்பி தூரஇடங்களுக்குச்செல்லும் பிரயாணிகள் நேற்று மிகவும் அல்லோலகல்லோலப் பட்டுள்ளனர். குறிப்பாக இப் பஸ்ஸை நம்பி நெல்லியடி, பருத்தித்துறைக்குச் செல்லும் உத்தியோகத்தர்களும்வியாபாரிகளும் தனிப்பட்ட வாகனங்களில் கூடியபணம் கொடுத்து செல்லவேண்டி ஏற்பட்டது. இது சம்பந்தமாக இ. போ. ச, முகாமையாளருக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாம்.

## பொலிசார் தேடுகின்றனர்

யாழ்ம்பாணம், புதன் வேலணையில் நடைபெற்ற கைகலப்பொன்று சம்பந்தமாக காயங்களுக்குள்ளான வேலணை பங்களாவடியைச் சேர்ந்த இலகுப்பிள்ளைநடராசா என்பவர்யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

இவரைஅதே இடத்தைச் சேர்ந்த இருவர் இரும்புக் கம்பியால் தாக்கியதாகவும் மயக்கமுற்ற நிலையில் சம்பவம் நடந்தஇடத்தில் விழுந்துகிடந்த இவர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் பொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுசம்பந்தமாகச்சந்தேகத்தின் பேரில இருவரை ஊர்காவற்றுறைப் பொலிசார் தேடுகின்றனர், [ந. நி]

## டாக்டருக்கு பிரியாவிடை

சுழிபுரம், செவ். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில்கடமையாற்றி, தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைக்கு பிரதம டாக்டராகச் செல்லும் டாக்டர் கே. குமாரசாமிக்குப் பிரியாவிடையளிக்க மூளாய், சுளிபுரம், தொல்புரம் பொதுமக்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## தாக்கப்பட்டதாக நோயாளி புகார்

யாழ்ப்பாணம்,புதன் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வைத்தியம் செய்ய வந்த ஒருவர் இனம்தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டாராம். இது சம்பந்தமாக கரையூர் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த பெரியண்ணன் முருகன்என்பவர் நோவு ஒன்றுக்குப் புக்கை கட்டுவதற்கு யாழ்ப்பாணம் வந்திருந்தாராம். அவர் யாழ்ப்பாணம் கடற்கரை வீதிக்கு அண்மையிலுள்ள வைத்தியர்ஒருவரின் வீட்டுக்குச் சென்ற போது அங்கு இனம் தெரியாதநபர் ஒருவரால் பலமாகத் தாக்கப்பட்டாராம். இதனுல் காயங்களுக்குள்ளான அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக வைத்தியரின் தம்பி ஒருவரைப் பொலிஸர் தேடுகின்றனர். சந்தேக நபர் தலைமறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

[ந. நி.]

## இடமாற்றம்

இம்மாதம் முதல் திருக்கோணமலை நகரசபையின் லிகிதர் திரு. ஆர். தணிகாசலம் இரண்டாம்தரலிகிதர் பதவி உயர்வு பெற்று பருத்தித்துறை நகரசபையின்பிரதம லிகிதராக மாற்றப்பட்டிருக்கிருர்.


4-வது வெற்றி வாரம
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ண [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]
மொடேர்ன் [பதுளை]
தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.

ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: ...எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்: ராமண்ணா

உங்கள் குடும்பத்தின் பாதுகாப்புக்கு
டெற்றோல்

பயங்கரக் கிருமிகள் எங்கும் மறைந்திருக்கின்றன. உங்கள் குழந்தை தவழ்ந்து விளையாடும் தரையில் கூட அபாயகரமான நோய்க் கிருமிகள் இருக்கலாம்.
வந்த பின் காத்தலை விட வருமுன் காத்தலே சிறந்ததென்பதை அனைவரும் அறிவோம். பயங்கரக் கிருமிகளிடமிருந்து உறுதியான பாதுகாப்புப் பெற உலகெங்கும் நம்பிக்கை பெற்ற தொற்று நாசினி டெற்றோல்.
வெட்டுக்காயம், சிராய்ப்பு, புண், பூச்சிக்கடி ... ஆபத்தாய் முடியாமல் காப்பது டெற்றோல். ... வாய்ந்த தொற்று நாசினியாயினும் தசை நார்களுக்கு இதமானது. அதன் இதமான வன்மை காரணமாக மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கும் பிரசவ மருத்துவத்துக்கும் அது ஏற்றது.
தரையிலும் கால்வாய்களிலும் மற்றும் இடங்களிலும் அபாயக் கிருமிகளைக் கொல்ல டெற்றோல் உபயோகியுங்கள்.


பாதுகாப்பாய் இருங்கள்—உலகெங்கும் டாக்டர்கள் தேர்ந்தெடுக்கும் அதிநம்பிக்கையான தொற்று நாசினியான டெற்றோல் உபயோகியுங்கள்.
டெற்றோல் எப்போதும் நீரில் கலந்து உபயோகிக்கப்படவேண்டும்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "ராதா அண்ணன் கையில் ரிவால்வர் இருந்ததைக் கண்டேன்" -- எம். ஜி. ஆர்.



[1-ம் பக்கத் தொடர்ச்சி]

[ரிவால்வர்] பிடித்து அவரது வலது நெற்றிப் பொட்டுக்கு எதிராக குறிவைத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும்படி நான் கேட்டுக்கொண்டேன். காயமடைந்த ராதா அண்ணனைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படி வாசுவைக்கேட்டுக்கொண்டேன். என்னுடைய வளர்ப்பு மகனை அப்புவுடன் நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கு எனக்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்ட பின் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன். இதன்பின் நான் சென்னை பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன். அங்கு நான் மூர்ச்சையடைந்தேன். பலமணிநேரத்தின் பின்னரே மூர்ச்சை தெளிந்தேன்.

**தேர்தல் கூட்டத்தில் இருந்து திரும்பியதும்**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி நடிகர் எம். ஜி. ஆர். தமது சாட்சியத்தில் குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறினார்.

தேர்தல் கூட்டம் ஒன்றுக்குச் சென்று திரும்பியதும் வாசு டெலிபோன் செய்ததாக எனது மனைவி தெரிவித்தார். பின்னர் மீண்டும் வாசு 'டெலிபோன்' செய்தார். படம் சம்பந்தமாக கோயம்புத்தூரிலிருந்து சிலர் வந்திருப்பதாக அவர் தெரிவித்தார். 'நான் நன்றாகக் களைப்படைந்திருக்கிறேன் என்னை மறுநாள் சந்திக்கும்படி அவர்களிடம் சொல்லும்படியும் என்னை அவர்கள் ஸ்ரூடியோவில் சந்திக்கலாமென்றும் சொன்னேன். இது நல்ல நாளாக இருப்பதால் என்னைச் சந்திக்கஅவர்கள் தீர்மானமாக இருப்பதாகவும் வாசுசொன்னார், மாலை 5 மணிக்கு அவர்கள் என் வீட்டுக்கு வந்தனர்.

நான் உள்ளே வந்ததும் அவர்கள் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். ராதா இளைக்க இளைக்க முச்சுவிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டேன். என்னைக் கண்டதும் ராதா அண்ணன் எழுந்து எனது மேசைக்கருகே வந்தார். வழக்கமாக ராதா அண்ணன் நிற்கும்பொழுது நான் உட்கார்ந்திருப்பதில்லை. ராதா அண்ணனை உட்காரும்படி நான் கேட்டுக்கொண்டேன்.

**வியாதி அதனால் உட்காரமுடியாது**

தான் மூலவியாதியால் கஷ்டப்படுவதால் தம்மால் உட்காரமுடியவில்லையென்றும் வாசு வீட்டில் அளவுக்கு அதிகமாக நெய்ச்சோறு சாப்பிட்டுவிட்டதால் தமக்கு வயிற்றில் வாய்வுக்கோளாறு ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் நடந்து திரியவே விரும்புவதாகவும் ராதா அண்ணன் கூறினார்.

தயாரிப்பிலிருக்கும் படத்துக்கு மாதத்துக்கு பத்து 'கால்சீட்டுக்கள்' கொடுக்கப்பட வேண்டுமென்று ராதா அண்ணன் யோசனை சொன்னார். இரண்டு மாதங்களுக்கு பத்து கால்ஷீட்டுகள் கொடுக்கப்படலாம் என்று நான் யோசனை சொன்னேன். இச்சமயம் திடீரென்று எனது இடது காதின் கீழ்ப்பக்கத்தில் திடீரென வலியேற்பட்டதை நான் உணர்ந்தேன். திரும்பிப்பார்த்ததும் ராதா அண்ணன் தனது கையில் வைத்திருந்த ரிவால்வரால் தனது வலதுபக்க நெற்றிப் பொட்டுக்குக் குறிவைத்ததைப் பார்த்தேன். எம். ஜி. ஆர்.

**குறுக்குவிசாரணை**

எதிர்தரப்பு வழக்கறிஞரால் நடிகர் எம். ஜி. ஆர். குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது அவர் கூறியதாவது:

காங்கிரஸ் அக்ராசனர் காமராஜரை நான் "என் தலைவர்" என்று ஒரு தடவை குறிப்பிட்டதற்காக எனது கட்சி என்னைக் கண்டித்தது உண்மைதான், ஆனால், அதுபற்றிய பத்திரிகைச் செய்தி சரியானதல்ல என்பதை அறிந்துகொண்டதும் என் மீது கூறிய கண்டனத்தை கட்சி வாபஸ்பெற்றுக் கொண்டது. 1966-ம் ஆண்டில் காமராஜரின் பிறந்தினக் கொண்டாட்டக் கூட்டமொன்றில் நான் பேசுகையில் அவரை ஒரு "நல்ல தலைவர்" என்று குறிப்பிட்டிருந்தேன். 'என் தலைவர்' என்று நான் குறிப்பிடவில்லை.

நடிகன் என்ற முறையில் தீவிரமாக அரசியலில் பங்கு கொள்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தேன்.

**பிரமுகர் என்றால் என்ன?**

"நீங்கள் ஒரு தி. மு. க. பிரமுகரா?" என்று வழக்கறிஞர் கேட்டபோது "பிரமுகர் என்பதன் அர்த்தத்தைப் பொறுத்தது" என்று கூறிய எம். ஜி. ஆர்; "அரசியலில் தி. மு. கழகத்துக்கு உதவிஅளித்திருக்கிறேன். ஆனால் நான் பிரமுகரா என்பது எனக்குத் தெரியாது" என்று கூறினார்.

**வழக்கறிஞர்-** எஸ். எஸ். ராஜேந்திரன் தி. மு. கழகத்தில் ஒரு பிரமுகரா?

**எம். ஜி. ஆர்-** கட்சியிலுள்ள அங்கத்தவர்களுக்கிடையில் நான் வேறுபாடுகாண்பதில்லை.

மேல்விசாரணை இம் மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மே மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மொழிச்சட்டத்தால்.,

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வார்த்தை நடாத்தி இவர்களின் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவுகாண வழிசெய்வேன். 60 வயதிற்குப்பின் கட்டாய ஒய்வு என்ற நிலைமையை ஒவ்வொரு ஆண்டும் ஒரு வருஷமாகக் குறைத்துக்கொண்டுவந்தால், இவர்களின் கஷ்டம் கொஞ்சம்கொஞ்சம் தாங்கக்கூடியதாக இருக்கும் என்பது எனது கருத்து. இக்கருத்தை நீங்கள் ஆராய்ந்து பார்த்து முடிவைக் கூறினால் இது பற்றியும் பிரதமருடன் கூறலாம்.

## 'திருக்குறளின் உள்தத்துவக் கொள்கை சைவசித்தாந்தமே'

### திருக்குறள் மகாநாட்டில் வஜ்ரவேலு முதலியார்

சங்கானை, செவ்:

"வள்ளுவன் தான் ஒரு தமிழன் என்று சொல்லவில்லை. இன்னும் சொல்வதானால், வள்ளுவன் தமிழைப்பற்றியே ஒன்றும் சொல்லவில்லை. மதுரையைப்பற்றியோ, மயிலாப்பூரைப்பற்றியோ, சைவத்தைப்பற்றியோ, சமணத்தைப்பற்றியோ வள்ளுவன் எதுவும் சொல்லவில்லை. தான் மக்களுள் ஒருவன் என்ற நோக்கோடு மக்களுக்காக, மக்களுக்கு வழிகாட்ட, மக்களில் ஒருவனாக இருந்து திருக்குறளை இயற்றினான். அதனால்தான் அன்று திருக்குறள் எம்மதத்தினரும் எம்மொழியினரும் ஏற்றுக்கொள்ளும் உலகப் பொதுமுறையாகப் பரிணமிக்கிறது," என்று சைவசித்தாந்தச் செம்மல் க. வஜ்ரவேலு முதலியார் இன்றுகாலை சங்கானை கதிரவேலுச்சட்டம்பியார் அரங்கில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டின் இரண்டாவதுநாள் விழாவில் கலந்துகொண்டு "திருக்குறளின் உட்கிடக்கை சைவசித்தாந்தமே" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

திருக்குறள் சைவசித்தாந்த நூலென்று நான் கூறவரவில்லை. ஆனால் திருக்குறளின் உள் தத்துவக் கொள்கை சைவசித்தாந்தமே என்பது எனது கருத்து. அறஒழுக்கங்களையே சமயங்கள் கூறுகின்றன. இந்தவகையில் திருமறை எல்லா மதங்களும் ஏற்கக்கூடிய ஒரு நூல். ஆனால் சைவசித்தாந்தம் எவ்வகையில் குறளுடன் ஒன்றுபடுகின்றதென்பதே நமது ஆராய்வு.

மன்னுயிர் என்ற பதத்தைப் பாவித்ததன்மூலம், உயிரென ஒன்று உண்டு என்பதை வள்ளுவன் ஒப்புக்கொள்ளுகிறான். ஆணவம், கன்மம், மாயை இவைகளைவிட்டு விலகி உயிர் இறைவனை அடைதலை 'மெய்யுணர்தல்' எனத் தமிழ்ஞானசம்பந்தர் கூறுகிறார். "இருள் நீங்கி இன்பம் பயக்கும், மருள் நீங்கி மாசறுகாட்சி அவர்க்கு" என்ற குறளில் வள்ளுவனும் இதையே கூறுகிறான்.

வள்ளுவன் கடவுள் வாழ்த்துஎன்ற ஒரு அதிகாரத்தை மெய்யுணர்தல் என்ற நோக்கோடு மங்கள வாழ்த்தாக குறளிலே அமைத்தான் என்பது பரிமேலழகர் கருத்து. நூல்களில் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரம் தொல்காப்பியர் காலத்திற்கே பிறபட்டுவந்தது.

**கதாப்பிரசங்கம்**

தென்புலோலி சாரையடி வீரபத்திரர் கோவில் சந்நிதானத்தில் வரும் வெள்ளிக்கிழமை திரு. இரா. சிவஅன்புவின் 'பக்தநந்தனார்' என்னும் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழும்.

## ஒரே விதமான சம்பளம் வழங்கப்பட வேண்டும்'

### உள்ளூராட்சி ஊழியர் சங்கத்தின் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

எல்லா உள்ளூராட்சி மன்றச் சிப்பந்திகளுக்கும் அவர்களின் தராதரத்தைப் பொறுத்து ஒரேவிதமான சம்பளம் கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதென்ற பிரேரணை நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற ஊழியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இலங்கையிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளும் சமூகம் கொடுத்திருந்தார்கள். இக்கூட்டத்திற்கு விசேஷமாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும் அழைக்கப்பட்டிருந்தார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் பேசுகையில் தெரிவித்ததாவது-

கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாதிருந்தது. ஆனால் உள்ளூராட்சிஅமைச்சர் தற்போது சமர்ப்பித்திருக்கும் உள்ளூராட்சி சேவை மசோதாவால் போதிய வசதி வழங்கப்படும். அதேவேளையில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் மற்றைய இலாகா ஊழியர்களுக்கும் அரைச் சம்பளம் வழங்குவதுபோல வழங்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்.

யாழ். மாவட்ட கிராம சபைத் தலைவர்கள் சங்கத் தலைவர் திரு. இராஜசூரியர் உட்பட இன்னும் பலர் பேசினார்கள். ந. நி.

## கட்டாய...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் பற்றிக் கேட்டபோது, '1947-ம் ஆண்டில் திரு. ஜி. ஜி. ஆதரித்த சட்டம் அமுலுக்கு வந்திருந்தால் 7 லட்சம் பேருக்கு பிரஜாவுரிமை கிடைத்திருக்கும். ஆனால் தற்போது நிறைவேற்றப்படும் சட்டம் படுமோசமானது. இச்சட்டம் மூலம் இங்கு 3 லட்சம் பேருக்கு வாக்குரிமை கிடைத்தால், விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன, 5 லட்சம் பேர் இந்தியாவுக்குப்போக வேண்டும்" என்று செனட்டர் மாணிக்கம் சொன்னார்.

விடுதலைஇயக்க கொள்கைகளை விட்டுக்கொடுக்காதபடி ஒத்துப்போகக்கூடிய எந்தக் கட்சிகளுடன் இணையச்சித்தமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

செனட்டர் மாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:

தமிழரசுக் கட்சியும். தமிழ்க்காங்கிரசும் ஒற்றுமைப்பட்டு தமிழ்மக்களுக்கு விமோசனமளிக்கக் கூடிய ஒரு அரசியல் திட்டத்தை தெரிந்து குழுவிற்குமுன் சமர்ப்பிக்க வேண்டும். விமோசனம் கிடைக்க தமிழருக்கு ஒற்றுமை அவசியம்.

## புத்தரகித்த...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புத்தரகித்தாவின் மரணம் சம்பந்தமாக நகர திடீர் மரணவிசாரணை அதிகாரி எச். எம். இஸ்மாயில் இன்று விசாரணை நடத்தினார். இவ்விசாரணையில் திரு. டி. எச். ஐயதுங்கா தமது வழக்கறிஞர் தலுவத்தைமூலம், இந்தமரண விசாரணை ஒரு நீதிபதியினால் நடத்தப்படவேண்டுமென்றும் புத்தரகித்தவுக்கு நஞ்சூட்டப்பட்டதாலேயே மரணம் ஏற்பட்டிருக்கிறதென்று தாம் சந்தேகம் கொள்வதாகவும் விண்ணப்பித்தார்.

**அத்தவில் வந்த செய்தி**

இம்மாதம் 23-ந் திகதிக்கிடையில் [இன்று] தாம்விடுதலை செய்யப்படாவிட்டால் பண்டாரநாயகா கொலையில் சம்பந்தப்பட்ட சகலருடைய பெயர்களையும்தாம் வெளியிடப்போவதாக புத்தரகித்த இவ்வருடம் ஏப்ரல்மாதம் 9-ந் திகதி வெளியான 'அத்த' பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியில் தெரிவித்திருந்தாரென்றும் வழக்கறிஞர் தலுவத்த மூலம் ஐயத்துங்க எடுத்துக்காட்டினார்.

இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மரணவிசாரணை அதிகாரி புத்தரகித்தாவின் மரணம்பற்றி விசாரணைசெய்யும் பொறுப்பை நீதிபதி சுவாரிஸிடம் ஒப்படைத்தார்.

புத்தரகித்தவின் தாயார் எலன் சில்வாவும் அவரது சகோதரி குசுமாவதியும் நீதிபதி நடத்திய விசாரணையில் சமூகமளித்திருந்தனர். விசாரணை பிற்பகல் 1-30மணிக்கு ஆரம்பித்தது. சிறைச்சாலை சுப்ரின்டன்ட் டபிள்யு. ஜே. டி. சில்வா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு ஒருவர் வந்து புத்தரகித்தாவைப் பார்த்து "உமக்கு ஏன் புத்தரகித்த என்று பெயர் வைத்தார்கள்?" என்று ஏசினார்.

புத்தரகித்தாவின் சகோதரி குசுமாவதி ரணதுங்கா சாட்சியமளிக்கையில், புத்தரகித்தாவை யாரும்கொலை செய்யவில்லை என்று தாம் நம்புவதாகவும் அவர் இயற்கைமரணம் அடைந்திருக்கிறாரென்பதே தமது நம்பிக்கையென்றும் உரிய சமயத்தில் அவரது சடலத்தை தகனம் செய்யவிடாது தடுத்துத் தாமதப்படுத்துவதற்கு அவரது அரசியல் எதிரிகள் முயற்சி செய்கிறார்களென்றும் கூறினார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் டபிள்யு. டி. எல். பெர்னாண்டோ, டாக்டர் சி. எச். கொடிக்கார, டாக்டர் சி. ஜயசேகரா ஆகியோர் சாட்சியமளிக்கையில் புத்தரகித்த இருதய நோய் காரணமாக மரணமடைந்தார் என்று கூறினர்.

சட்ட வைத்திய அதிகாரி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் பிரேதபரிசோதனையில், நஞ்சூட்டப்பட்டதற்கு எந்தவித சான்றுகளும் காணப்படவில்லையென்றார்.

இயற்கை காரணமாக ஏற்பட்ட மரணம் என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org